தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர். மா. ராஜவேல், Ph.D.
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்:pro@tnau.ac.in

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 23.12.2024

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

# தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் காகித அடிப்படையிலான பொருட்கள் உற்பத்தி குறித்த திறன் மேம்பாட்டுப் பயிற்சி

தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழக வேளாண் பொறியியல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் உணவு பதன் செய் பொறியியல் துறையில், 19.12.2024 முதல் 20.12.2024 வரை காகித அடிப்படையிலான பொருட்கள் உற்பத்தி குறித்த திறன் மேம்பாட்டுப் பயிற்சி நடைபெற்றது. இப்பயிற்சி அமர்வுகளில், வீணாகும் பொருட்கள் அல்லது வளங்களில் இருந்து பொருளாதார நன்மைகளை உருவாக்குவது பற்றிய நுண்ணறிவுகள் மற்றும் சுற்றுச்சூழல் பாதிப்பைக் குறைப்பதற்கும் பொருளாதார வாய்ப்புகளை உருவாக்குவதற்கும் கழிவுகளை மறு பயன்பாடு அல்லது மறு சுழற்சி செய்வதற்கான புதுமையான மற்றும் நிலையான வழிகளைப் பற்றி கற்பிக்கப்பட்டது. பயிற்சி பெற்றவர்களுக்கு காகித துண்டாக்கி இயந்திரம், காகித கூழ் தயாரிக்கும் இயந்திரம், அட்டை தயாரிக்கும் இயந்திரம், அட்டை நேர்த்தி இயந்திரம், உலர்த்தி, அச்சு இயந்திரம் போன்ற மேம்பட்ட இயந்திரங்கள் மூலம் அலுவலக கோப்புகளை தயாரிப்பது குறித்து பயிற்சி அளிக்கப்பட்டது. மேலும், இயந்திரங்களை இயக்குவது குறித்தும் பயிற்சி அளிக்கப்பட்டது. பங்கேற்பாளர்கள், மக்கும் பேக்கேஜிங் பொருட்கள் உற்பத்தி ஆலைக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். வேளாண் எச்சங்களிலிருந்து மக்கும் பேக்கேஜிங் பொருட்கள் தயாரிப்பது குறித்து செயல் விளக்கம் அளிக்கப்பட்டது. பங்கேற்பாளர்களுக்கு தயாரிப்பு சந்தைப்படுத்தல் உத்திகள் பற்றிய விரிவுரைகள் வழங்கப்பட்டன. திறன் மேம்பாட்டு பயிற்சியை வெற்றிகரமாக முடித்த பங்கேற்பாளர்களுக்கு சான்றிதழ் வழங்கப்பட்டது.

**மக்கள் தொடர்பு அலுவலர்**